**நில ஆர்ஜித கோருரிமை தீர்ப்பாயம்/**
**முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,**
**விருதுநகர் மாவட்டம் (இ) திருவில்லிபுத்தூர்**
**முன்னிலை:–திரு.ஆ.கந்தகுமார், எம்.எல்.,**
**நில ஆர்ஜித கோருரிமை தீர்ப்பாயர்/**
**முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி**
**2026 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 12 ஆம் நாள் வெள்ளிக்கிழமை**
**எல்.ஏ.ஓ.பி எண்.99/2025**
**TNVR010020272025**

கே.காசிராஜன்,
த/பெ கிருஷ்ணசாமி,
70/1, கதிரேசன் மலைக்கோவில் தெரு,
லட்சுமியாபுரம்,
கோவில்பட்டி – 628 502,
தூத்துக்குடி மாவட்டம். ...கோருரிமையாளர்.

**/எதிர்/**

சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர்,
சிப்காட் (நில எடுப்பு)
சாத்தூர். ...நில ஆர்ஜித அதிகாரி.

இந்த நில ஆர்ஜித கோரிக்கை மனு என் முன்பு 08.06.2026 ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, கோருரிமையாளர் தரப்பில் வழக்குரைஞர் திரு.P.இராமசாமி ஆஜராகியும், நில ஆர்ஜித அதிகாரி தரப்பில் கூடுதல் அரசு வழக்கறிஞர் (நி.ஆ) திரு.B.சரவணன் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள்வரை இந்நீதிமன்றத்தின் சீரிய

பரிசீலனையில் இருந்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**<u>உத்தரவு</u>**

கோருரிமையாளருக்கு பாத்தியப்பட்ட இழப்பீடு தொகை ரூ.1,59,699/-ஐ நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ய அனுமதி கோரி பிரிவு 10(3) of the Tamil Nadu Acquisition of Land for Industrial Purpose Act, 1997 (Tamil Nadu Act 1999) & (u/s 64 & 77(2) of the RFCTLARR Act, 2013-ன் கீழ் நில ஆர்ஜித அதிகாரியால் இந்த அறிக்கை படிவம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>Reference in brief:-</u>**

2) விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டம், இ.குமாரலிங்கபுரம் கிராமத்தில் சிப்காட் தொழிற்பூங்கா அமைப்பதற்காக புல எண்.47/4-ல் கண்ட 0.73.0 ஹெக்டேர் (1.81 ஏக்கர்) புஞ்சை நில எடுப்பு செய்து, அவசர கால அடிப்படையில் நில எடுப்பு சட்டம் பிரிவு 3(1)ன் கீழான அறிவிக்கை அரசாணை (நிலை) எண்.23 தொழில்துறை (சிப்காட் நில எடுப்பு) துறை நாள்.03.02.2020 ல் ஒப்புதல் அளிக்கப்பட்டு, நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி புல எண்.47/4-ல் கண்ட 0.73.0 ஹெக்டேர் (1.81 ஏக்கர்) புஞ்சை நிலம் தொடர்பாக ஆஜர் பட்டாதாரர் கிருஷ்ணசாமி என்பவர் 01.04.2022-ல் காலமாகிவிட்டார் என்று தெரிவித்து அன்னாரின் வாரிசுதாரர்கள் (1) ருக்குமணி, (2) ராஜகோபால அம்மாள், (3) ஆழ்வார்நாயகி, (4) ராஜேந்திரன், (5) காசிராஜ் மற்றும் (6) ராஜேஷ்வரி ஆகியோர்கள் 25.11.2024 அன்று தீர்ப்பு விசாரணைக்கு ஆஜராகி மேற்படி நிலம் SLR ஆவணத்தின் அடிப்படையிலும், நில உடமை மேம்பாட்டுத் திட்டத்தின் படியும் தங்களது தகப்பனார் கிருஷ்ணசாமி பெயரிலேயே தாக்கலாகியுள்ளது

எனவும், மேற்படி நிலம் தங்களுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்பதால் 10(1) தவிர வேறு ஆவணங்கள் எதுவும் தங்கள் கைவசம் இல்லை எனவும், தங்களது தகப்பனார் 01.04.2022 அன்று காலமாகிவிட்டார் எனவும், அதற்கு ஆதாரமாக இறப்பு மற்றும் வாரிசு சான்று நகலை சமர்ப்பித்துள்ளதாகவும், அன்னாருக்கு தாங்கள் ஆறு நபர்கள் மட்டுமே வாரிசுதாரர்கள் ஆவோம் என்றும், எனவே, மேற்படி நிலத்திற்குரிய இழப்பீட்டுத் தொகையினை தங்கள் ஆறு பேர்களுக்கும் சரிசமமாக பிரித்து வழங்குமாறும் கேட்டுக்கொண்டனர்.

3) இருப்பினும், விசாரணையின் அடிப்படையிலும், ஆவணங்களின் அடிப்படையிலும் சரிபார்க்கப்பட்டதில், இந்நேர்வில் 6 நபர்கள் பட்டாவின்படி உரிமையாளர்களாக உள்ள நிலையில், 5 வது பட்டாதாரரான காசிராஜ் என்பவர் விசாரணைக்கு ஆஜராகவில்லை என்பதால், புல எண்.47/4 விஸ்தீரணம் 0.73.0 ஹெக்டேர் (1.81 ஏக்கர்) நில எடுப்பிற்கான இழப்பீட்டுத் தொகையில் மற்ற நபர்களுக்கு தலா 6 ல் 1 பங்குத் தொகையை வழங்கவும், திரு.காசிராஜ் என்பவர் பங்கான 6 ல் 1 பங்கை விதிகளுக்குட்பட்டு நீதிமன்ற வைப்பீட்டில் வைக்கலாம் என தனி வட்டாட்சியர் சிப்காட் (நி.எ) அலகு–1 பரிந்துரை செய்துள்ளார். மேற்படி பரிந்துரை ஏற்கப்பட்டு, திரு.காசிராஜ் என்பவரின் 6 ல் 1 பங்கு இழப்பீட்டுத் தொகையை நில உரிமைதாரரான திரு.காசிராஜ் என்பவரின் பெயரில் நீதிமன்ற வைப்பீடு செய்ய உத்தரவிட்டதின் அடிப்படையில், இழப்பீடு தொகை ரூ.1,59,699/– இந்நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யப்பட்டு, ஷை நில ஆர்ஜித மனுவானது நில ஆர்ஜித அதிகாரியால் இந்நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

**<u>கோருரிமையாளர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள கோரிக்கை மனுவின் சுருக்கம்:–</u>**

4) விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டம், இ.குமாரலிங்கபுரம் கிராமத்தில் சர்வே எண்.47/4 ல் உள்ள 0.73.0 ஹெக்டேர் நிலம் தனக்கும், தனது உடன்பிறந்தவர்களுக்கும் பட்டா எண்.1256 ன் படி பாத்தியப்பட்டதாகும். மேற்படி இடத்தில் தனக்கு 6 ல் 1 பங்கு பாத்தியம் உள்ளது. மேற்படி இடம் சிப்காட் நிறுவனத்திற்கு சிப்காட் தொழில் பூங்கா அமைக்கும் நோக்கத்திற்காக, தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்கான நில எடுப்பு சட்டம் 1997 ன்படி அரசால் நில எடுப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்படி கையகப்படுத்தப்பட்ட நிலத்திற்கு சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர், சிப்காட் (நிலம் கையகப்படுத்துதல்) அவர்களால் இறுதி இழப்பீட்டு தொகை வழங்கப்பட்டுள்ளது. மேற்படி இறுதி இழப்பீட்டுத் தொகையில் தனது உடன்பிறந்த சகோதர, சகோதரிகளான ருக்குமணி, ராஜகோபால அம்மாள், ஆழ்வார்நாயகி, இராஜேந்திரன், இராஜேஸ்வரி ஆகியோர் அவர்களுக்குரிய பங்கு தொகையை பெற்றுக் கொண்டுவிட்டனர்.

5)மேற்படி இறுதி இழப்பீட்டுத் தொகையில் மேற்படி உரிமைகோருபவருக்குரிய 6 ல் 1 பங்கு மட்டும் மேற்படி நில எடுப்பு அதிகாரியால் நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி இந்த உரிமைகோருபவருக்குரிய தொகையை இந்த உரிமைகோருபவர் பெற்றுக்கொள்ள விருப்பம் உடையவராக உள்ளார். நீதிமன்றத்தில் உள்ள இழப்பீட்டுத் தொகை இந்த உரிமைகோருபவருக்கு கிடைக்கக் கூடியதாகும். நீதிமன்றத்தில் உள்ள இழப்பீட்டுத் தொகையை இந்த உரிமைகோருபவர்

பெற்றுக்கொள்ள உத்தரவிட வேண்டியது அவசியமாயும், நியாயமாயும் உள்ளது. ஆகவே, இந்த உரிமைகோருபவர் தாக்கல் செய்யும் இந்த அறிக்கையை ஏற்றுக்கொண்டு நீதிமன்ற வைப்பீட்டில் உள்ள இந்த உரிமைகோருபவருக்கு பாத்தியப்பட்ட இழப்பீட்டு தொகையை இந்த உரிமைகோருபவர் பெற்றுக்கொள்ள உத்தரவிட வேண்டுமாய் பிரார்த்திக்கப்பட்டுள்ளது.

6) தற்போது இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில்,

**மனுவில் கோரியுள்ள பரிகாரம் கோருரிமையாளருக்கு கிடைக்கத்தக்கதா? இல்லையா?**

என்பதேயாகும்.

7) இம்மனுவில் கோருரிமையாளர் திரு.காசிராஜன் என்ற காசிராஜ் என்பவர் கோ.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு, கோ.சா.ஆ.1 முதல் 5 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. நில ஆர்ஜித அதிகாரி தரப்பில் கோ.சா.1 குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். நில ஆர்ஜித அதிகாரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் எதுவும் இல்லை என்றும் மேற்குறிப்பு செய்யப்பட்டது. மேலும் அவர்கள் தரப்பில் இந்த கோரிக்கை மனுவிற்கு எந்தவித ஆட்சேபனையும் குறிப்பிட்டு சொல்லவில்லை.

**<u>பிரச்சினைக்கான தீர்வு:-</u>**

8) இந்த வழக்கில் எதிர்மனுதாரரான சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர், (நில எடுப்பு), சிப்காட், விருதுநகர் மாவட்டம் (இருப்பு) சாத்தூர்/நில ஆர்ஜித அதிகாரியால் விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டம், இ.குமாரலிங்கபுரம் கிராமத்தில் சிப்காட் தொழிற்பூங்கா

அமைப்பதற்காக புல எண்.47/4−ல் கண்ட 0.73.0 ஹெக்டேர் (1.81 ஏக்கர்) புஞ்சை நிலம் எடுப்பு செய்த நிலத்திற்கான இழப்பீட்டுத் தொகையை நில ஆர்ஜித சட்டம் பிரிவு 10(3) of the Tamil Nadu Acquisition of Land for Industrial Purpose Act, 1997 (Tamil Nadu Act 1999) & (u/s 64 & 77(2) of the RFCTLARR Act, 2013−ன் கீழ் இந்நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. சிப்காட் தொழிற்பூங்கா அமைப்பதற்காக நிலம் ஆர்ஜிதம் செய்த வகையில் ஷை நிலத்தினை ஆர்ஜிதம் செய்ததற்கான நஷ்ட ஈடு தொகையை எதிர்மனுதாரர் இந்நீதிமன்றத்தில் வைப்பீடு செய்துள்ளதால், ஷை தொகைக்கு கோருரிமையாளர் உரிமை கோரியுள்ளார்.

9) இந்த வழக்கில் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த 31.12.2024 ம் தேதிய அவார்டு எண்.03/2024 ல் 16 மற்றும் 17 வது பக்கத்தில் சர்வே எண்.47/4−க்கான புஞ்சை நிலம் தொடர்பாக ஆஜர் பட்டாதாரர் கிருஷ்ணசாமி என்பவர் 01.04.2022−ல் காலமாகிவிட்டார் என்று தெரிவித்து அன்னாரின் வாரிசுதாரர்கள் (1) ருக்குமணி, (2) ராஜகோபால அம்மாள், (3) ஆழ்வார்நாயகி, (4) ராஜேந்திரன், (5) காசிராஜ் மற்றும் (6) ராஜேஷ்வரி ஆகியோர்கள் 25.11.2024 அன்று தீர்ப்பு விசாரணைக்கு ஆஜராகி மேற்படி நிலம் SLR ஆவணத்தின் அடிப்படையிலும், நில உடமை மேம்பாட்டுத் திட்டத்தின் படியும் தங்களது தகப்பனார் கிருஷ்ணசாமி பெயரிலேயே தாக்கலாகியுள்ளது எனவும், மேற்படி நிலம் தங்களுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்பதால் 10(1) தவிர வேறு ஆவணங்கள் எதுவும் தங்கள் கைவசம் இல்லை எனவும், தங்களது தகப்பனார் 01.04.2022 அன்று

காலமாகிவிட்டார் எனவும், அதற்கு ஆதாரமாக இறப்பு மற்றும் வாரிசு சான்று நகலை சமர்ப்பித்துள்ளதாகவும், அன்னாருக்கு தாங்கள் ஆறு நபர்கள் மட்டுமே வாரிசுதாரர்கள் ஆவோம் என்றும், எனவே, மேற்படி நிலத்திற்குரிய இழப்பீட்டுத் தொகையினை தங்கள் ஆறு பேர்களுக்கும் சரிசமமாக பிரித்து வழங்குமாறும் கேட்டுக்கொண்டனர்.

10)இருப்பினும், தீர்ப்பு விசாரணையின்போது, விசாரணையின் அடிப்படையிலும், ஆவணங்களின் அடிப்படையிலும் சரிபார்க்கப்பட்டதில், இந்நேர்வில் 6 நபர்கள் பட்டாவின்படி உரிமையாளர்களாக உள்ள நிலையில், 5 வது பட்டாதாரரான காசிராஜ் என்பவர் விசாரணைக்கு ஆஜராகவில்லை என்பதால், புல எண்.47/4 விஸ்தீரணம் 0.73.0 ஹெக்டேர் (1.81 ஏக்கர்) நில எடுப்பிற்கான இழப்பீட்டுத் தொகையில் மற்ற நபர்களுக்கு தலா 6ல் 1 பங்குத் தொகையை வழங்கவும், திரு.காசிராஜ் என்பவர் பங்கான 6ல் 1 பங்கை விதிகளுக்குட்பட்டு நீதிமன்ற வைப்பீட்டில் வைக்கலாம் என தனி வட்டாட்சியர் சிப்காட் (நி.எ) அலகு–1 பரிந்துரை செய்துள்ளார். மேற்படி பரிந்துரை ஏற்கப்பட்டு, திரு.காசிராஜ் என்பவரின் 6 ல் 1 பங்கு இழப்பீட்டுத் தொகையை நில உரிமைதாரரான திரு.காசிராஜ் என்பவரின் பெயரில் நீதிமன்ற வைப்பீடு செய்ய உத்தரவிட்டதின் அடிப்படையில், இழப்பீடு தொகை ரூ.1,59,699/– இந்நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

11) கோருரிமையாளரான காசிராஜன் என்ற காசிராஜ் என்பவர் கோ.சா.1 ஆக சாட்சியமளித்து பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்து, அவரது கோரிக்கை ஸ்டேட்மெண்ட்டில் உள்ள விவரங்களை எடுத்துச் சொல்லியும், மொத்த நஷ்ட ஈட்டுத் தொகையான

ரூ.9,58,199/-ல் 6 ல் 1 பங்கு தொகையான தலா ரூ.1,59,700/- வீதம் தங்கள் ஆறு பேர்களுக்கும் கிடைக்கக்கூடியது என்றும் தன்னுடன் பிறந்த சகோதர, சகோதரிகளான ருக்குமணி, ராஜகோபால அம்மாள், ஆழ்வார்நாயகி, ராஜேந்திரன் மற்றும் ராஜேஷ்வரி ஆகியோர்கள் அவர்களுக்குரிய 6 ல் 1 பங்கு தொகையான ரூ.1,59,700/- வீதம் பெற்றுக்கொண்டுவிட்டனர் என்றும் தன்னுடைய பங்குத் தொகையான ரூ.1,59,699/- மட்டும் நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். மேலும் கோ.சா.ஆ.1 முதல் 5 வரையிலான ஆவணங்களையும் தாக்கல் செய்துள்ளார்.

12)ஆர்ஜிதம் செய்யப்பட்ட சர்வே எண்.47/4-க்கான பட்டாதாரர் கிருஷ்ணசாமி எனவும், மேற்படி நிலமானது SLR ஆவணத்தின் அடிப்படையிலும், நில உடமை மேம்பாட்டுத் திட்டத்தின்படியும் கிருஷ்ணசாமி என்பவர் பெயரிலேயே தாக்கலாகி இருந்ததையும் நில ஆர்ஜித அதிகாரி பிறப்பித்த உத்தரவின் மூலம் தெரிய வருகிறது. மேற்படி ஆஜர் பட்டாதாரர் கிருஷ்ணசாமி என்பவர் 01.04.2002 அன்று காலமாகிவிட்டார் என தெரிவித்து அன்னாரின் வாரிசுகளான இந்த மனுவின் கோருரிமையாளரின் உடன் பிறந்த சகோதர, சகோதரிகள் மட்டும் 25.11.2024 அன்று தீர்ப்பு விசாரணைக்கு ஆஜராகி அவர்களது தகப்பனாரின் இறப்பு மற்றும் வாரிசு சான்று நகலை சமர்ப்பித்துள்ளனர் என்பதையும், இந்த மனுவின் கோருரிமையாளரான காசிராஜ் விசாரணைக்கு ஆஜராகவில்லை என்பதினால், அவருக்குரிய இழப்பீட்டுத் தொகையை மட்டும் அவரது பெயரிலேயே நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ய உத்தரவிடப்பட்டிருப்பதையும் அறிய முடிகிறது. மேற்படி நிலம்

கோருரிமையாளருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்பதால் 10(1) அடங்கல் தவிர வேறு ஆவணங்கள் எதுவும் அவர்கள் கைவசம் இல்லை என்று சொல்லியிருப்பதும் தெரிய வருகிறது. இந்த சங்கதிகளை பொறுத்து நில ஆர்ஜித அதிகாரி தரப்பில் எந்தவித ஆட்சேபனையும் தெரிவிக்கப்படவில்லை.

13) இந்த வழக்கில் Ex.C1 ஆக கோருரிமையாளரின் ஆதார் அட்டை நகல் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. Ex.C2 ஆக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையினரால் வழங்கப்பட்ட பட்டா எண்.1256 ன் கணினி நகல் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. அதில் ஆர்ஜிதம் செய்யப்பட்ட புல எண்.47/4-க்கான உரிமையாளர்கள் (1) ருக்குமணி (2) ராஜகோபால அம்மாள் (3) ஆழ்வார்நாயகி (4) ராஜேந்திரன் (5) காசிராஜ் மற்றும் (6) ராஜேஸ்வரி என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. Ex.C3 ஆக ஆர்ஜித நிலத்திற்குரிய புல வரைபடமும், Ex.C4 ஆக நில ஆர்ஜித அதிகாரி தரப்பில் இந்த மனுவின் கோருரிமையாளருக்கு அனுப்பப்பட்ட இறுதி விசாரணை அறிவிப்பும், Ex.C5 ஆக நில ஆர்ஜித அதிகாரி பிறப்பித்த தீர்வத்தின் நகலும் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

14) இவ்வாறான நிலையில், ஆஜர் பட்டாதாரர் கிருஷ்ணசாமி என்பவருக்கு (1) ருக்குமணி (2) ராஜகோபால அம்மாள் (3) ஆழ்வார்நாயகி (4) ராஜேந்திரன் (5) காசிராஜ் மற்றும் (6) ராஜேஸ்வரி ஆகியோர்கள் வாரிசுகள் என்பதும், மேற்படி ஆஜர் பட்டாதாரர் கிருஷ்ணசாமி இறந்த உடனேயே அவருக்குப் பாத்தியப்பட்ட அனைத்து சொத்துக்களையும் இந்த மனுவின் கோருரிமையாளரும், அவருடன் பிறந்த சகோதர, சகோதரிகளும் சர்வ சுதந்திர பாத்தியமாய்

அடைந்து யாருடைய இன்னலும், இடைஞ்சலும் இல்லாமல் வெளிப்படையாக அனுபவம் செய்து வந்துள்ளனர் என்பதும், அதேபோல தாவா ஆர்ஜித நில சொத்தையும், இந்த மனுவின் கோருரிமையாளரும், அவருடன் பிறந்த சகோதர, சகோதரிகளும் அடைந்து அனுபவம் செய்து வந்துள்ளனர் என்பதும் தெரிய வருகிறது.

15) மேலும் நில ஆர்ஜித அதிகாரி தரப்பில் கோ.சா.1 குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவர் தன்னுடைய குறுக்கு விசாரணையில்,

> "18.12.2024ம் தேதி அன்று சிப்காட்டில் நிலம் எடுப்பது சம்பந்தமாக எனக்கு 1ம் எதிர்மனுதாரர் தரப்பிலிருந்து அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றால் சரிதான். அந்த அறிவிப்பின் பேரில் அன்றைய தேதியில் நான் விசாரணைக்கு ஆஜராகவில்லை என்றால் சரிதான். எனது உடன்பிறந்தவரின் இழப்பீட்டு பங்கு தொகை அனைத்தையும் அன்றைய தேதிய விசாரணையில் வாங்கிக்கொண்டார்கள் என்றால் சரிதான். அன்றைய தேதியில் நான் ஆஜராகாததால் எனக்குரிய இழப்பீட்டு தொகை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யப்பட்டது என்றால் சரிதான்."

என்றும் குறிப்பிட்டுள்ளார். மேலும் நில ஆர்ஜித அதிகாரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் எதுவும் இல்லை என்றும் மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும் அவர்கள் தரப்பில் இந்த கோரிக்கை மனுவிற்கு எந்தவித ஆட்சேபனையும் செய்யப்படாததாலும், மேற்படி ஆர்ஜித நிலம் (1) ருக்குமணி (2) ராஜகோபால அம்மாள் (3)

ஆழ்வார்நாயகி (4) ராஜேந்திரன் (5) காசிராஜ் மற்றும் (6) ராஜேஸ்வரி ஆகிய ஆறு நபர்களுக்கும் பாத்தியப்பட்டது என்பதும் தெரிய வருகிறபடியாலும், நில எடுப்பு அலுவலர் தரப்பில் ஆர்ஜித புல எண்.47/4–ல் கண்ட 0.73.0 ஹெக்டேர் (1.81 ஏக்கர்) நிலத்திற்கு நஷ்ட ஈடாக வழங்கிய மொத்த நஷ்ட ஈடு தொகை ரூ.9,58,199/–ல் 6 ல் 1 பங்கு தொகையான தலா ரூ.1,59,700/– வீதம் மேற்படி ஆறு பேர்களுக்கும் கிடைக்கக்கூடியது என்றும் அதில் இந்த மனுவின் கோருரிமையாளருடன் பிறந்த சகோதர, சகோதரிகளான ருக்குமணி, ராஜகோபால அம்மாள், ஆழ்வார்நாயகி, ராஜேந்திரன் மற்றும் ராஜேஷ்வரி ஆகியோர்கள் அவர்களுக்குரிய 6 ல் 1 பங்கு தொகையான ரூ.1,59,700/– வீதம் பெற்றுக்கொண்டுவிட்டனர் என்பதினால், நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யப்பட்டுள்ள ரூ.1,59,699/– இந்த மனுவின் கோருரிமையாளருக்கு கிடைக்கக்கூடியது என்றும் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணப்படுகிறது.

16) முடிவாக, இம்மனு அனுமதிக்கப்பட்டு, நில ஆர்ஜித அதிகாரியால் தீர்வம் எண்.03/2024 நாள்.31.12.2024–ன் படி இந்நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யப்பட்டுள்ள நஷ்ட ஈடு தொகை ரூ.1,59,699/– இந்த மனுவின் கோருரிமையாளருக்கு கிடைக்கக்கூடியது என்றும் மேற்படி இழப்பீட்டுத் தொகை மற்றும் அதற்குரிய வட்டித் தொகை முழுவதையும் கோருரிமையாளர் பெற்றுக்கொள்ளலாம் என்றும் உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 12 ஆம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய உத்தரவு பகரப்பட்டது.

KANTHAKUMAR Digitally signed by KANTHAKUMAR
Date: 2026.06.12 15:46:01 +0530

**நில ஆர்ஜித கோருரிமை தீர்ப்பாயர்/**
**முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**
**விருதுநகர் மாவட்டம்(இ),**
**ஸ்ரீவில்லிபுத்தூர்.**

**<u>கோருரிமையாளர் தரப்பு சாட்சி</u>:–**

| | |
|---|---|
| கோ.சா.1 | திரு.காசிராஜன் என்ற காசிராஜ் |

**<u>கோருரிமையாளர் தரப்பு சான்றாவணங்கள்</u>:–**

| | | |
|---|---|---|
| கோ.சா.ஆ.1 | --- | உரிமைகோருபவரின் ஆதார் அட்டை நகல் |
| கோ.சா.ஆ.2 | --- | தபசில் சொத்திற்குரிய பட்டா (பட்டா எண்.1256) கணினி நகல் |
| கோ.சா.ஆ.3 | --- | தபசில் சொத்திற்குரிய புல வரைபடம் கணினி நகல் |
| கோ.சா.ஆ.4 | 18.12.2024 | சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர், சிப்காட் (நில எடுப்பு) அவர்கள் உரிமை கோருபவருக்கு அனுப்பிய இறுதி தீர்வாணை, இறுதி விசாரணை அறிவிப்பு |
| கோ.சா.ஆ.5 | 31.12.2024 | சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர், சிப்காட் (நில எடுப்பு) அவர்களின் தீர்ப்பு |

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u>:– இல்லை**

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>:– இல்லை**

KANTHAKUMAR Digitally signed by KANTHAKUMAR
Date: 2026.06.12 15:46:18 +0530

**நில ஆர்ஜித கோருரிமை தீர்ப்பாயர்/**
**முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**
**விருதுநகர் மாவட்டம்(இ),**
**ஸ்ரீவில்லிபுத்தூர்.**

முதன்மை மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.
L.A.O.P.No.99/2025
சீரான/வரைவு – உத்தரவு
12.06.2026